# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2019 யூலை

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு என்னும் வினாத்தாள் பாடப்புத்தகத்தை (கோட்பாடுகள் மற்றும் அதன் பிரயோகங்கள்) அடிப்படையாகக் கொண்ட ஒன்பது (9) கட்டாய வினாக்களை உள்ளடக்கியதாகும். இங்கு மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. அவையாவன, ஒவ்வொன்றும் ஐந்து (5) புள்ளிகளைக் கொண்ட நான்கு (4) கட்டாய வினாக்களைக் உள்ளடக்கிய **பகுதி (A),** ஒவ்வொன்றும் பத்து (10) புள்ளிகளைக் கொண்ட மூன்று (3) கட்டாய வினாக்களை உள்ளடக்கிய **பகுதி (B)** மற்றும் ஒவ்வொன்றும் 25 புள்ளிகளைக் கொண்ட இரண்டு (2) கட்டாய வினாக்களை உள்ளடக்கிய **பகுதி (c)** என்பனவாகும்.

முழுமையான வினாப்பத்திரமும் பாடப்புத்தகத்தினை (கோட்பாடுகள் மற்றும் அதன் பிரயோகங்கள்) அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் விசேடமாக இறுதி இரண்டு வினாக்களிலும் பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவும் அவற்றைப் பிரயோகிப்பது பற்றிய அறிவும் பரீட்சிக்கப்பட்டிருந்தன. பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தைக் கற்று, கடந்த கால வினாப்பத்திரங்களையும் செய்து பார்த்திருப்பின், இவ்வினாப்பத்திரத்திற்கு இலகுவாக 50 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்க முடியும். அதிகளவான பரீட்சார்த்திகள் பாட அறிவைக் கொண்டிருந்த போதிலும், அவர்கள் பாட விடயத்தை அடிப்படையாகக் கொண்டு வினாத்தாளில் தரப்பட்ட வினாக்கள் தொடர்பில் விடைகள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றிய பயிற்சியினைக் கொண்டிருக்கவில்லை.

இவ்வினாத்தாளுக்கான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்ததுடன் வினாத்தாளுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை சரியாக முகாமித்ததன் மூலம் சகல வினாக்களுக்கும் முறையாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்த பரீட்சார்த்திகள் காணப்பட்டனர். எவ்வாறாயினும், குறைந்த புள்ளிகளைப் பெற்றிருந்த குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள், இவ்வினாத்தாளின் சகல வினாக்களுக்கும் விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் விடையளித்துமிருந்தனர். எவ்வாறாயினும், வினாக்களின் சில பகுதிகளுக்கு விடையளிக்கப்படாமலுமிருந்தன. அவ்வாறு வினாக்கள் விடையளிக்கப்படா மைக்கு மோசமான நேர முகாமைத்துவம், அறிவு குறைவாக இருந்தமை, வினாத்தாளிலுள்ள வினாக்களை விளங்கிக்கொள்ளாமை போன்றவை பிரதானமான காரணங்களாக இருக்கலாம்.

இவற்றிற்குப் புறம்பாக, புள்ளியிடும் செயன்முறையின்போது அவதானிக்கப்பட்ட பொதுவான வழுக்கள் பின்வருமாறு:

- பகுப்பாய்வுத் திறன்களின் குறைபாடு
- நேர்த்தியற்ற கையெழுத்து
- உயர் புள்ளிகள் வழங்கப்பட்டிருந்த வினாக்களுக்கு குறுகிய விடைகள் எழுதப் பட்டிருந்தமை
- குறைந்த புள்ளிகள் வழங்கப்பட்ட வினாக்களுக்கு நீண்ட விடைகள் எழுதப்பட்டிருந்தமை
- தரப்பட்ட விடயங்களில் பிரச்சினைகள் இனங்காணப்பட்டிருப்பினும், வினாக்களுக்கு ஏற்றாற்போல் விடைகள் வழங்கப்படாமை
- விடைகளைத் திட்டமிடாமை, சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தமை
- வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டவாறு ‘‘வினைச் சொல்’’ பற்றிக் கவனம் செலுத்தாமை.
- வினாக்களிலிருந்து பரீட்சகர் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை விளங்கிக்கொள்ளாமை.

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

### வினா இல. 01

மின் உபகரணங்களை இறக்குமதி செய்து சில்லறையாக விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனியைப் பாதிக்கக்கூடிய வெளிவாரிச் சூழல் காரணிகளை (பொருளாதார மற்றும் சட்ட) இவ்வினா பரீட்சித்திருந்தது.

இவ்வினா நேரடி வினாவாகவும் பாட விடயம் பாடப் புத்தகத்திலிருந்து நேரடியாக எடுக்கப்பட்ட தாகவும் இருந்ததுடன் வெளிவாரிக் காரணிகளுடன் தொடர்புடைய தரப்பட்ட காரணிகளின் கீழ் விடையளிப்பதற்குப் பரீட்சார்த்திகள் கோரப்பட்டிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகளால் வினாவில் என்ன எதிர்பார்க்கப்பட்டது என்பதை விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் அதற்கிணங்க விடைகளை வழங்கி முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொள்ள முடிந்திருந்தது. எவ்வாறாயினும், மின் உபகரண வியாபாரத்துடன் தொடர்புபடுத்தாது பொதுவாக விடையளித்திருந்த பரீட்சார்த்திகளால் புள்ளிகளைப் பெற முடியாது போயிருந்தது. மேலும், சில பரீட்சார்த்திகள் வியாபாரத்தைப் பாதிக்கின்ற வெளிவாரிச் சூழல் காரணிகளாக தற்போதைய அரசியல், சமூக ஊடகத் தாக்கங்களைத் தொடர்புபடுத்துவதற்கு முயற்சித்திருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இது மாணவர்களது பிரயோக அறிவின் குறைபாட்டைக் காட்டுகிறது.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

### வினா இல. 02

இவ்வினாவின் பகுதி **(a)** பல்வேறுபட்ட வகை இடர்களையும் குறைப்பதற்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையொன்றாக இடரினை ஏற்றுக்கொள்ளுதல் நிலைமை பற்றிப் பரீட்சித்திருந்ததுடன் பகுதி **(b)** ஆனது தரப்பட்ட மூன்று சந்தர்ப்பங்களிலும் இடரினைக் குறைக்கும் முறைகளை அடையாளங் காண்பதையும் பரீட்சித்திருந்தது. வினாவின் இப்பகுதியானது மாணவர்களின் பிரயோக அறிவைப் பரீட்சித்திருந்தது.

வினாவின் இரு பகுதிகளுக்கும் சில மாணவர்களால் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், இடர் தவிர்ப்பனை இடரப் பங்கீட்டுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் குழப்பியிருந்ததன் காரணமாக **பகுதி (b)** இற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.***

### வினா இல. 03

வினாவின் **பகுதி (a)** இல், கணக்காய்வாளர் விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய உரிமத்தினதும் அதன் சூழலினதும் பகுதிகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கு விடை அளித்திருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கி யிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் 3 பகுதிகளை அடையாளங் காண்பதற்குப் பதிலாக நீண்ட விடைகளை அளித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அநேகமாக நேர முகாமைத்துவமின்மை காரணமாக இந்தப் பரீட்சார்த்திகள் முழு வினாத்தாளுக்கும் விடையளிக்க முடியாமல் இருந்திருக்கும்.

வினாவின் பகுதி **(b)** இன் கீழ், உரிமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் இரண்டு கூறுகளை அடையாளங் காணுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். அதிகளவான பரீட்சார்த்திகளால் திருப்திகரமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், அரசியல், பொருளாதார, சமூகச் சூழல் போன்ற சம்பந்தமற்ற விடைகளும் காணப்பட்டன.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

**வினா இல. 04**

வினாவின் **பகுதி (a)** இல், தரப்பட்ட விவரணத்தில் முகாமைப்படுத்தப்படாத மூன்று தரக் கட்டுப்பாட்டு மூலகங்கள் பரீட்சிக்கப்பட்டன. சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே தேவைப்பாட்டினை அடையாளங்காணவும் துல்லியமாக விடையளிக்கவும் முடிந்திருந்தது.

இவ்வினாவின் **பகுதி (b)** இல், முகாமைப் பங்காளர் அவரது கடமைகளை அவருடைய அணியினருடன் சேர்ந்து ஆற்றுகையில் அவரின் பொறுப்புப் பற்றி பரீட்சித்திருந்தது. சில பரீட்சார்த்திகள் மனித வள விடயங்கள் மற்றும் தொழிற்பாட்டு விடயங்கள் போன்ற பொது விடயங்களை வழங்கியிருந்தனர்.

தரக் கட்டுப்பாட்டு மூலகம் மற்றும் நிறுவன முகாமையொன்றுக்கான அத்தகைய தேவைப்பாட்டின் முக்கியத்துவம் போன்றவை பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. செய்முறை அனுபவமின்மை மற்றும் பாடப் புத்தகத்தைப் படிக்காமை என்பன குறைந்த புள்ளிகளைப் பெற வழிவகுத்திருக்கலாம்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

## <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

**வினா இல. 05**

வினாவின் **பகுதி (a)** இல், தரப்பட்ட விவரணத்தில் ஆராயப்பட்ட சம்பந்தப்பட்ட ஈடுபடுத்தலின் அடிப்படை விடயங்களுடனான முத்தரப்பு தொடர்புமுறையின் நடைமுறைப் பிரயோகம் பரீட்சிக்கப்பட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகளுக்கு ஈடுபடுத்தலின் அடிப்படை விடயங்தை இனங்காண முடிந்திருந்தது எனினும் பலர், ஈடுபடுத்தலின் வெளியீடு ஆனது கம்பனியின் பங்குதாரர் களுக்கும் பணிப்பாளர்களுக்குமானது எனக் குறிப்பிட்டிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த் திகளால் மற்றைய இரண்டு தரப்பினரதும் வகிபாகங்களை இனங்காண முடிந்திருந்தது. மேலும், அதிகளவான பரீட்சார்த்திகளால் முற்றடக்கமான விடையொன்றினை வழங்க முடியாதிருந்தது. உதாரணமாக சில பரீட்சார்த்திகள் தரப்பினரை மாத்திரம் வழங்கி யிருந்ததுடன் பூரண விடையினை வழங்குவதற்கு தரப்பினரின் பெயர்களைத் தொடர்புபடுத்தாது எழுதியிருந்தனர்.

வினாவின் **பகுதி (b)** இல், ஈடுபடுத்தலை ஏற்பதற்கு முன்னர் **கமல் அசோசியேட்ஸ்** இனால் ஆற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகளை அடையாளங் காண்பதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றல் பரீட்சிக்கப்பட்டது. இப்பகுதிக்கு முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொண்ட மாணவர்களும் காணப்பட்டனர். சில பரீட்சார்த்திகள் நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு, நிதிக் கூற்றுக்களை அறுதியீடு செய்வதற்கு கணக்காய்வாளரை அனுமதித்தல், நிதிக் கூற்றுக்களில் உள்ள மோசடிகள், பிறழ் கூற்றுக்கள், வழுக்களைக் கண்டுபிடிப்பதற்கு கணக்காய்வாளரின் ஆதரவைப் பெற அனுமதித்தல் போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

**வினா இல. 06**

இவ்வினாவின் **பகுதி (a)** ஆனது இணைந்த அணுகுமுறையின் கருத்தினைப் பரீட்சித்திருந்த நேரடி வினாவொன்றாகும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர் ஆயினும் சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெறுவதற்குரிய திருப்திகரமான விடையினை வழங்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், பாடப்புத்தகத்தின்படி, திறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாடு, விளைதிறன்மிக்க கட்டுப்பாடுகள், கட்டுப்பாட்டுச் சோதனையின் ஆற்றுகையும் வலுவளிப்பு விதிமுறையும் போன்ற மூன்று பகுதிகள் விடைகளில் உள்ளடக்கப்பட வேண்டும். எனினும், அதிகளவான பரீட்சார்த்திகள் மேலுள்ளவற்றில் ஒன்று அல்லது இரண்டு விடயங்களை மாத்திரமே வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வலுவளிப்பு விதிமுறை, இணைந்த கணக்காய்வு அணுகுமுறையாக இரண்டு வருடங்களைக் கவனத்திற் கொள்ளுதல் போன்ற முற்றிலும் சம்பந்தமற்ற ஒரு சொல் விடையினை அளித்திருந்ததுடன் சிலர் இணைந்த அணுகுமுறைக்காக அகராதியிலுள்ள கருத்தினை விளக்கியிருந்தனர்.

**பகுதி (A)** இன் **உப பகுதி (b)** இல், வருமானக் கிடைப்பனவைப் பரீட்சிக்க ஆற்றப்பட வேண்டிய வலுவளிப்பு விதிமுறைகள் பற்றிக் கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடையினை வழங்கியிருந்தனர்.

இவ்வினாவின் **பகுதி (B)** இன் கீழ், ''கணக்காய்வு ஆவணப்படுத்தல்'' என்பதன் பொருள் வரையறையும் வேலைத்தாளின் உள்ளடக்கமும் பரீட்சிக்கப்பட்டது. இரு வினாக்களும் கோட்பாட்டு ரீதியான வினாக்களாக இருந்ததுடன் பாடப்புத்தகத்திலிருந்து நேரடியாகக் கேட்கப்பட்டும் இருந்தன.

**பகுதி (a)** இன் படி, பரீட்சார்த்திகள் கணக்காய்வு ஆவணப்படுத்தலுக்கான பொருள் வரையறை தேவைப்படுத்தப்பட்டிருந்தது. சகல பரீட்சார்த்திகளும் இப்பகுதிக்கு விடையளித்திருந்தனர்; எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகளாலேயே பூரணமான விடையினை வழங்கக் கூடியதாக இருந்தது. பாடப்புத்தகத்தின்படி, ஆற்றப்படும் கணக்காய்வு விதிமுறையினைப் பதிவு செய்தல், பெறப்படும் சம்பந்தப்பட்ட கணக்காய்வுச் சான்று, கணக்காய்வாளர் அடைய வேண்டிய முடிவு ஆகிய மூன்று பகுதிகள் விடையில் உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் மேலுள்ளவற்றில் ஒன்று அல்லது இரண்டு பகுதிகளை மாத்திரமே வழங்கியிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் கணக்காய்வு ஆவணப்படுத்தலாக போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகளைப் பதிவு செய்தல் போன்ற வினாவில் தரப்பட்ட உரையினையே மீள எழுதியிருந்தனர்.

**பகுதி (b)** இன் படி, பரீட்சார்த்திகள் வேலைத்தாளில் உள்ளடக்கப்படும் மூன்று அடிப்படைத் தகவல்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்தி களுக்கே பூரணமான விடையினை அளிக்கக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கியிருந்ததுடன் கணக்காய்வுத் திட்டத்திலுள்ள விடயங்களை வழங்கியிருந்தனர். மேலும், அதிகளவான பரீட்சார்த்திகள் ஊழியர் பெயர், சேர்ந்த திகதி, சம்பளம், மேலதிக நேரம், வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கை போன்ற தனிப்பட்ட வேலைத்தாள்களின் ஒப்பந்த விபரங்களை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் நிரந்தர, நடைமுறைக் கணக்காய்வுக் கோப்புகளில் உள்ள விடயங்களை வழங்கியிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

**வினா இல. 07**

இவ்வினாவின் **பகுதி (a)** இல், பரீட்சார்த்திகள் கணக்காய்வாளர் ஒருவர் மாற்றப்படாத அபிப்பிராயம் ஒன்றினை எப்போது வழங்க வேண்டும் என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தனர்.

வினாவின் இப்பகுதி மிகவும் நேரடியானதாக இருந்ததுடன் அதற்குப் புத்தகத்திலிருந்து நேரடியாக விடையளிக்கக்கூடியதாகவும் இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இந்தப் பகுதிக்கு முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

வினாவின் **பகுதி (b)** இல், மாற்றப்பட்ட அபிப்பிராயங்களின் வகைகள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் பரீட்சகரால் எதிர்பார்க்கப்பட்ட விடைகளை வழங்கியதன் மூலம் முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொண்டிருந்தனர்.

வினாவின் **பகுதி (c)** ஆனது, விவரணத்தில் தரப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நடைமுறை வியாபாரச் சூழலின் பிரயோகத்தைப் பரீட்சித்திருந்ததுடன் கணக்காய்வு அபிப்பிராயத்திற்குத் தரப்பட்ட கணக்காய்வுப் பிரச்சினைகளின் தாக்கத்தை எவ்வாறு மதிப்பிடுவது என்பதன் மீதான அறிவையும் பரீட்சித்திருந்தது. பல பரீட்சார்த்திகளால் அவர்களது கோட்பாட்டு ரீதியான அறிவினை நடைமுறை நிலைமைக்குப் பிரயோகிப்பதற்கு இயலாமலிருந்தது.

பொருத்தமான மாற்றத்தின் வகையினைத் தெரிவு செய்வது பற்றிய போதுமானளவு அறிவின்மையால், பல பரீட்சார்த்திகள் மிகவும் சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்ததுடன் விவரணத்தில் தரப்பட்ட விடயங்கள் மற்றும் எண் பெறுமானங்களை கணக்காய்வு அபிப்பிராயத்துடன் தொடர்புபடுத்தாது அவற்றை மீளவும் எழுதியிருந்தனர். மேலும், அதிகளவான பரீட்சார்த்திகள் LKAS 02 – தொக்கு மதிப்பீடு என்ற நியமத்தின் கீழ் விற்பனைக் கிரயம் மற்றும் இலாபம் மீதான அதன் தாக்கத்திற்கான தேவைப்பாட்டினை ஆராய்ந்திருக்கவில்லை / விபரித்திருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.***

## பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

**வினா இல. 08**

இவ்வினா தரப்பட்ட விவரணத்திலுள்ள உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டினை விளங்கிக் கொள்வதற்கான ஆற்றலைப் பரீட்சித்திருந்ததுடன் அவர்களின் கோட்பாட்டு ரீதியான அறிவை அவர்கள் மீள் நினைவூட்டக்கூடிய வழிகள் மற்றும் அவற்றை நடைமுறை / உண்மையான வியாபாரச் சூழலில் எவ்வாறு பிரயோகிக்க முடியும் என்பது பற்றியும் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் வினாவுக்கான செயலாற்றுகை மற்றைய வினாக்களுடன் ஒப்பிடுகையில் உயர் மட்டத்தில் காணப்பட்டது.

**பகுதி (a), (b), (c)**

இது நேரடி வினாவாக இருந்தபடியால் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

**பகுதி (a)** இல், பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளையும் விட செயன்முறைகளைச் சிந்திக்க வேண்டியிருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் வினாவின் இப்பகுதிக்கு விடையளித்திருந்ததுடன் திருப்திகரமான புள்ளிகளைப் பெறக்கூடிய தாகவும் இருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் முகாமைத் திறன்கள், பயிற்சிச் செயன்முறை போன்ற இவ்வினாவுக்கு முற்றிலும் சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகளால் வினாவின் **பகுதி (b)** இன் கீழ் தரப்பட்ட விவரணத்தின் காசு முகாமைச் செயன்முறையில் இருந்த பலவீனங்களைத் தேர்வு செய்யக்கூடியதாக இருந்தது. மேலும், பெரும்பாலும் சகல பலவீனங்களும் வினாவில் தரப்பட்டிருந்ததினால் வினாவிலிருந்து விடையினை எடுப்பதற்கு அதிகளவான பரீட்சார்த்திகளால் இயலுமாகவிருந்தது.

எதிர்பார்க்கப்பட்ட விடையினை வினாவிலிருந்தே எடுத்துக் கொள்ளக்கூடியதாக இருந்த காரணத்தால் வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை மிக உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

**பகுதி (c)** இற்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இப்பகுதிக்கு உயர் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

**பகுதி (d) பகுப்பாய்வு விதிமுறைகள்**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு விடையளித்திருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் பகுப்பாய்வு விதிமுறைகளாக மீள் கணிப்பீடு, அறுதியீடு, வவுச்சர்களின் விபரமான பரிசீலனை போன்ற முற்றிலும் சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். இது பரீட்சார்த்திகள் பகுப்பாய்வு விதிமுறை என்பதால் என்ன கருதப்படுகிறது என்பது பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

**பகுதி (e)**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் திறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாடு மேம்படுத்தப்படுவதைக் கருத்திற்கொண்டு வினாவில் தரப்பட்ட தீர்மானத்துடன் இணங்கியிருந்தனர். எவ்வாறாயினும், அவர்கள் திறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாடு ஒரு நியாயமான உறுதிப்பாட்டினை மாத்திரமே வழங்குகிறது என்ற விடயத்தை விளங்கிக்கொள்ளத் தவறியிருந்ததுடன் செயற்பாட்டு இடரின் தொடர்ச்சியான மாற்றம், வழக்கமானதல்லாத கொடுக்கல் வாங்கல் மற்றும் மனித வழுக்கள் போன்ற திறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கும்கூட உள்ளார்ந்த வரையறையானது தாக்கத்தைக் கொண்டிருக்க முடியும் என்ற விடயத்தை அவர்கள் புறக்கணித்திருந்தனர்.

இதனால், வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை மிகக் குறைவாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், சோடி மாணவர்களால் தர்க்கரீதியான விடையினை வழங்கி முழுமையான புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது.

**பகுதி (f)**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளித்திருந்ததுடன் முறைமையின் செயலொழுங்கு செயற்கூற்றுக்களில் அதிகாரமளிக்கப்படாத மாற்றங்களைத் தடுப்பதற்கு அல்லது கண்டுபிடிப்பதற்கு கொண்டிருக்க வேண்டிய கட்டுப்பாடுகளை அடையாளங் காண்பதற்கும் இயலுமாகவிருந்தது. இது ஒரு நடைமுறை வினாவாக இருந்தபடியால் வினாவின் இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.***

**வினா இல. 09**

**பகுதி (A)**

இவ்வினாவின் **பகுதி (a)** இல், ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான கணக்காய்வு விதிமுறையை ஆற்றும்போது சேகரிக்கக்கூடிய கணக்காய்வுச் சான்று மீதான அறிவினைப் பரீட்சகர் பரீட்சித்திருந்தார். அதிகளவான பரீட்சார்த்திகள் தங்களது விடைகளில் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் உறுதி ஆகியவற்றைக் குறிப்பிட்டிருந்ததுடன் வினாவுக்கு ஏற்புடையதான முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டிருந்தனர். எவ்வாறாயினும், வினாவுடன் சம்பந்தமற்ற விசாரணை, அவதானிப்பு, பரிசீலனை, மீள்கணிப்பீடு போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**பகுதி (b)**

இந்தப் பகுதியின் தேவைப்பாட்டின்படி, மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களை கணக்காய்வு செய்யும்போது ஆற்றப்பட வேண்டிய மூன்று கணக்காய்வு விதிமுறைகளை குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். சில பரீட்சார்த்திகள் சுயாதீன மதிப்பீட்டாளரின் அறிக்கை மற்றும் ஏனைய மதிப்பீட்டு அடிப்படையிலான விதிமுறைகளுக்கான கணக்காய்வு விதிமுறைகளைக் குறிப்பிடுவதற்கு மாறாக கணக்காய்வு விதிமுறைகளின் பொதுவான வகைகளுடன் விடையளித்திருந்தனர்.

**பகுதி (c)**

வினாவின் இப்பகுதியில், எழுத்து மூலமான முகாமைப் பிரதிநிதித்துவக் கடிதம் தேவைப்படுத்துகின்ற இரண்டு முக்கிய விடயங்களை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. வினாவானது முழுமையாக கோட்பாட்டு ரீதியான அறிவிலிருந்து கேட்கப்பட்டிருந்ததுடன் அவ்வறிவினைக் கொண்டிருந்த பரீட்சார்த்திகளால் திருப்திகரமான மட்டத்தில் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

**பகுதி (d)**

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் தொழில்சார் மதிப்பீட்டாளருடன் தொடர்பாடும்போது நான்கு முக்கிய விடயங்களை அடையாளங் காணுமாறு இப்பகுதி தேவைப்படுத்தியிருந்தது. ஆனால் பெரும்பாலானவர்கள் சரியான விடையினை அளித்திருக்கவில்லை.

இப்பகுதிக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டதுடன் சொத்துக்களின் கிரயம் அல்லது ஈற்றுப் பெறுமதி, மீள்மதிப்பீட்டின் பின்னரான தேய்மானம் போன்ற சில பொதுவான சம்பந்தமற்ற / நலிவான விடைகளும் வழங்கப்பட்டிருந்தன.

**பகுதி (B)**

இங்கு ஒரு புதிய கணக்காய்வு ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது.

அதிகளவான பரீட்சார்த்திகள் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளை ஆராயாது **சுதத்தினால்** இப்பணியினை ஏற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி (C)**

தரப்பட்ட விவரணத்துடன் சம்பந்தப்பட்ட ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் ஒத்திசைவுக்கான 03 அச்சுறுத்தல்களை விபரிக்குமாறு இங்கு கேட்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் கணக்காய்வில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது தொழிலின் கட்டுறுப்புகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவது சுய நாட்ட அச்சுறுத்தலை உருவாக்குகின்றது என்ற 3 விடயங்களில் ஒரு விடயத்தையே ஏற்பிசைவு செய்திருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகளால் ஏற்பிசைவு செய்யப்பட்டிராத மற்றைய 2 அச்சுறுத்தல்களும் பின்வருமாறு:

- கணக்காய்வுப் பங்காளருக்கு புதுவருட அன்பளிப்பாக மாலைதீவில் 5 நாட்கள் தங்குவதற்கு விருப்பறிவிப்புச் செய்யப்பட்டது. அன்பளிப்பின் பெறுமதி முக்கியமான தாகும்.
- கணக்காய்வுக் கட்டணத்தில் குறைப்பை மேற்கொள்ளவுள்ளதாக அச்சுறுத்தல் விடுத்து பிழையான கணக்கீட்டு நடைமுறையை ஏற்றுக்கொள்வதற்கு தலைவரால் நிர்ப்பந்திக்கப்படல்

***இவ்வினாவின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

\- - -

**<u>பரீட்சையின் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தை உயர்த்துவதற்கான பரிந்துரைகள்</u> :**

(1) பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தைப் படித்து, அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

(2) இந்தப் பாடத்துடன் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், சஞ்சிகைகளை வாசிப்பதுடன் கணக்காய்வுடன் தொடர்புடைய வேறு விடயங்களையும் வாசித்தறிதல்

(3) பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதுடன், வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச் சொல் நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு எவ்வாறு விடையளிப்பது என்பது பற்றியும் விளங்கிக் கொள்ளுதல்

(4) கடந்த கால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைக் கற்பதுடன், குறைந்தது கடந்த ஐந்து ஆண்டுகளின் நடைபெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்களைச் செய்து பார்த்து வினாக்கள் அமைக்கப்பட்டுள்ள விதம் பற்றி விளங்கிக்கொள்ள முயற்சித்தல்

(5) பரீட்சார்த்திகள் வினாத்தாள்களில் தரப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் பரீட்சையில் அதனைப் பிரயோகிப்பது பற்றிய பரீட்சகரின் எதிர்பார்ப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புடைமையை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(6) கடந்தகால வினாத்தாள்களில் பாடப் புத்தகத்திலுள்ள எந்தப் பகுதி பரீட்சிக்கப்பட் டுள்ளதோ அத்தகைய பகுதிகளை சிறு குறிப்புகளாக எழுதிக்கொண்டு படித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(7) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்காக வழங்கப்பட்ட நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த கால வினாக்களுக்கு விடையளித்துப் பயிற்சி எடுத்தல் வேண்டும். இது பரீட்சையின்போது நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

(8) பாடப் புத்தகத்தில் தரப்பட்ட ஒவ்வொரு பாட அத்தியாயத்திலிருந்தும் சிறு குறிப்பு களை எழுதிக் கொள்வதுடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களை நினைவில் வைத்திருப்பதற்காக அவற்றைப் படிக்கவும்.

**(9)** பரீட்சார்த்திகள் விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

(10) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு முன், அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(11) பரீட்சார்த்திகள், வினாவை விளங்கிக்கொள்வதற்கும் வினாவில் கேட்கப்பட்டதற்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்குமாக பரீட்சையின் போது தமது மனநிலையை தெளிவாகவும் சமநிலையாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

(12) பரீட்சார்த்திகள் வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வினாவுக்கு விடையளிப்பதற்கான நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுடன், வினாத்தாளில் தரப்பட்ட சகல வினாக்களுக்கும் விளைதிறனான வகையில் விடையளிப்பதற்கான இயலுமையுடன் இருக்க வேண்டும்.

(13) விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், தேவைப்படுத்தப்பட்ட சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளனவா, பொருத்தமானவாறு இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

- * * * -